[2003 ஜனவரி 28

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலே இருந்து அந்த விடுதிக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்துள்ள அடிப்படையிலே அரசினுடைய பங்களிப்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருப்பது புதிய விடுதிகள் தொடங்குவதற்கு அல்ல; விடுதிகள் கட்டுவதற்காகத்தான். ஆனால், இவர் புதிய விடுதிகள் தொடங்குவதற்காகக் கேள்வி கேட்டிருக்கிறார். நிதி ஒதுக்கி இருந்தால், அங்கே அவர் தொகுதியில் ஏதாவது ஒரு கட்டடம் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

9—

**தனித் தொழில் தீர்ப்பாயம்**

***27627—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளிலும் உள்ள பஞ்சாலைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க இத்தொழிலுக்கென தனித் தொழில் தீர்ப்பாயம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏற்கெனவே ஒரு சிறப்பு தொழில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2003 ஜனவரி 28]

முற்பகல் 10-30

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 6 மாதங்களுக்கு முன்னாலே எழுப்பப்பட்டது. 2001 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் தமிழகம் முழுவதும் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம் நடைபெற்றதைத் தொடர்ந்து நம்முடைய அரசு ஓர் இடைக்கால நிவாரணத்திற்கான 10(பி) அரசு ஆணையைப் பிறப்பித்தது. அதைப் பெரும்பாலான ஆலை முதலாளிகள் அமல்படுத்தாமல் வழக்குமன்றம் போய் நிலுவையில் இருந்தது. 3 ஆண்டுகாலமாக பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான சம்பள ஒப்பந்தம் ஏற்படவில்லை. அதையொட்டித்தான் வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஆகவே இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 18,000-க்கும் மேற்பட்ட சிறிய, பெரிய ஆலைகளைக் கொண்ட இந்தத் தொழிலுக்கு ஒரு தனித் தீர்ப்பாயம் ஏற்படுத்த வேண்டுமென்ற கேள்வி அதிலிருந்து வந்தது. அமைச்சர் அவர்கள் இங்கே தீர்ப்பாயம் அமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். மகிழ்ச்சி. அதனுடைய நடவடிக்கைகளை வேகப்படுத்துவதற்கும் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சினைகளை, இதர கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கும் இந்தத் தீர்ப்பாயம் நடவடிக்கைகள் எடுப்பதை உறுதிப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பாயம் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. தொழிற் சங்கங்களின் கேட்பு மனுக்கள் பெறப்பட்டு இருக்கின்றன. அந்தக் கேட்பு மனுக்கள் எல்லாம் 1,692 தொழில் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. அவை பெறப்படாமல் திரும்ப வரப்பெற்ற அந்த மனுக்கள் பத்திரிகைகளின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே இந்த அரசு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமைந்திருக்கிற தமிழக அரசு, தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குகின்ற இந்தப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தத் தீர்ப்பாயத்தின் மூலமாக ஏற்கெனவே

அமைக்கப்பட்டிருக்கக்கூடிய முத்தரப்புக் குழுக்கள் அவற்றின் மாதாந்திரக் கூட்டங்களை நடத்துவதற்கும் அதன் மூலமாக உரிய ஆய்வுகளைச் செய்து, அறிக்கைகளைப் பெற்று, அரசு அமைச்சரவையில் ஆய்வு செய்வதும், அந்த ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பாயம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான தொடர் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தரப்புக் குழுக்கள் என்பது, வேறு; இந்த தீர்ப்பாயம் என்பது வேறு. முத்தரப்புக் குழுக்கள் என்பது, அந்தந்த மாவட்டங்களில் உள்ள மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்குரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு அதனுடைய அறிக்கையைத் தந்து, அதன் மூலமாக ஆலைகளைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டவைதான் இந்த முத்தரப்புக் குழுக்கள். அந்தக் குழுவின் அறிக்கையை விரைவாக அரசுக்குத் தர வேண்டும் என்றும், மாதம் ஒரு முறையாவது அந்தக் குழு கூடி, அரசுக்கு அறிக்கையை வழங்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்போது அறிவுரைகள் வழங்கியிருக்கிறது. இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக, இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக தொடர்ந்து தொடர் நடவடிக்கைகளை, இந்தத் தீர்ப்பாயத்தினுடைய தலைவர் நீதிபதி திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**10—**

### சேமிப்புக் கிடங்கு

**•1582—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—